**Dina Mani**

Cholamandalam Investment net up 31% at Rs Rs.568 cr

Edition: Chennai Date: 01/05/2016 Page no: 15 Clip size: H: 9 cm / W: 9 cm

India Media Monitor

# சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் லாபம் 31% அதிகரிப்பு

**மும்பை, ஏப். 30:** சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் நிகர லாபம் சென்ற நிதி ஆண்டில் 31 சதவீதம் அதிகரித்து ரூ.568 கோடியாக இருந்தது.

இதுகுறித்து அந்நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி டி. அருள் செல்வன் கூறியுள்ளதாவது:

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் சென்ற நிதி ஆண்டின் நான்காவது காலாண்டில் வழங்கிய கடன் ரூ.4,941 கோடியாக இருந்தது.

2014-15 நிதி ஆண்டில் இதே கால அளவில் இது ரூ.3,509 கோடியாக காணப்பட்டது.

காலாண்டு நிகர லாபம் ரூ.135 கோடியிலிருந்து 42 சதவீதம் அதிகரித்து ரூ.192 கோடியாக இருந்தது.

சென்ற முழு நிதி ஆண்டில் நிகர லாபம் ரூ.435 கோடியிலிருந்து 31 சதவீதம் அதிகரித்து ரூ.568 கோடியாக இருந்தது.

மொத்த வாராக் கடன் விகிதம் 3.53 சதவீதமாகவும், நிகர வாராக் கடன் விகிதம் 2.13 சதவீதமாகவும் இருந்தது என்றார் அவர்.